அதற்கு அடுத்தபடியாக மத்திய அரசின் மூலமாக வனப் பாதுகாப்புச் சட்டம் என்று ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக இன்று வனத்துறையைச் சேர்ந்த பகுதியிலே வாழ்கின்ற மக்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த நலப்பணிகள், பல்வேறு காரியங்கள் அரசு மூலம் நடைபெற முடியாத அளவுக்கு இன்று பல்வேறு சிக்கல்கள் இந்த மத்திய அரசு சட்டத்தினால் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குமரி மாவட்டத்திலே கடலை ஆறு என்ற ஒரு திட்டத்திற்காக இந்த அரசு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியது. ஆனால் வனத்துறையைச் சேர்ந்த பகுதியில் கட்டப்பட வேண்டிய அந்தத் திட்டம் அதற்கான அனுமதியின்றி அந்த இடத்தில் கட்டமுடியாமல் மத்திய அரசின் அனுமதிக்காக 2 ஆண்டு காலத்திற்கு மேல்.....

7. அறிவிப்புகள்

உறுப்பினர்கள் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. The following messages have been received from the Commissoner of Police.

Sub: Thiru A. Rahmankhan, MLA and others-arrested in 'X' Station Cr. No. 62/83 u/s 143 IPC r/w 41 MCP Act-report sent.

I have the honour to inform you that Thiru A. Rahmankhan MLA was arrested at 10-15 hours to-day (28th January 1983) along with other DMK parymen in 'X' Station Cr. No. 62/83 u/s 143 IPC r/w 41 M.C.P. Act at Anna Sala near Anna Sarai for taking out procession to stage a picketing in violation of the prohibitory order He was brought to the office of he Commissioner of Police, Egmore Madras.

Sub: Thiru D. Purushothaman, MLA and others-arrested in 'X' Station Cr. No. 60/83 u/s 143 IPC r/w 41 MCP Act-report sent.

I have the honour to inform you that Thiru. D. Purushothaman MLA was arrested at 10.00 hrs. to-day (28th January 1983) along with other D.M.K. parymen in 'X' Station Cr. No. 60/83 u/s 143 IPC r/w 41 MCP Act near Pangal Building, Anna Salai, for taking out procession to stage a picketing in violation of the prohibitory order He was brought to the office of the Commissioner of Police, Egmore Madras.

Sub; Thiru P. Ponnurangam, M.L.A. and other arrested in 'X' Station Cr. No. 59/83 u/s 143 IPC r/w 41 MCP Act-report sent.

I have the honour to inform you tha Thiru P. Ponnurangam, M.L.A. was arrested a 09.45 hrs. to-day (28 h January 1983) along with other D.M.K. partymen in 'X' S ation Cr. No. 59 83 u/s 143. IPC r w 41 MCP Act at Robinson Park, Royapuram for taking out a procession to stage a picketing in violation of the prohibitory order. He was brought to the Office of the Commissioner of Police, Egmore, Madras.

Sub: Thiru A. Selvarajan, MLA and others-arrested in 'X Station Cr. No 61/83 u/s 143 IPC r/w 41 M.C.P.- report sent.

I have the honour to inform you that Thiru A. Selvarajan MLA was arrested at 10-15 hrs. to-day (28th January 1983) along with other DMK partymen in 'X' Station Cr. No. 61/83 u/s 143 IPC r/w 41 MCP Act at Sivagnanam Park, Kondithope for taking out a procession to stage a picketing in violation of the prohibitory order. He was brought to the Office of the Commissioner of Police, Egmore, Madras.

Sub: Thiru N. V. N. Somu, M.L A. and others-arrested in 'X Station Crime No. 58/83 u/s 143 IPC r/w 4 MCP Ac report sent.

I have the honour to inform you that Thiru. N.V.N. Somu, M.L.A. was arrested at 9-30 hrs. to-day 20th January along with other D.M.K partymen in X Station Crime No. 59/53 u/s 143 IPC r/w 4P MCP Ac at Choolai High Road for taking out l procession to stage a picketing in violat n of the prohibi ory order. H was brought to the Office of the Com ssioner of Police, Egmore. Madra .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: கைது செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான உணவு, எங்கே தங்க வைக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம்— தங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியிலே அது நடைபெறுவது. கைது செய்யப்பட்டவுடன் சட்டம் எல்லோருக்கும் சமம். பிடிபட்ட பிறகு எம்.எல்.ஏ., எம்.பி. என்று இல்லை. நான் பொதுவாகச் சொல்கிறேன். Anybody, if he offends law, is equal எம்.எல்.ஏ. அபெண்ட் பண்ணினால் ட்ரிட்மெண்ட் வேறு, சாதாரண மனிதன் அபெண்ட் பண்ணினால் ட்ரிட்மெண்ட் வேறு என்று கிடையாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தாங்கள் உயர்நீதி மன்றத்திலே பெரிய வக்கில்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் செய்யக் கூடியதைச் செய்வார்கள். நாம் அதைச் சொல்ல வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எந்த கிளாஸ் என்ற நிலைமை எல்லாம் இருக்கிறது.

1982 சனவரி 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டத்திற்கு முன்னால் எல்லோரும் சமம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாம்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டு இந்த அரசால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்காமல் காலதாமதம் செய்வதால் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின்னால் புரட்சித் தலைவருடைய அரசு மத்திய அரசினிடத்திலே நமக்குத் தேவையான தானியங்களைக் கேட்ட பிறகும் மத்திய அரசு கொடுக்காத சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பக்கத்திலே சொல்கிறார்கள், வறட்சி பற்றிய அறிக்கையை அனுப்பாததற்கு என்ன காரணம், ஏன் காலதாமதம் என்று கேட்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், ஏற்கெனவே இந்த அரசு அனுப்பிய அறிக்கைகளுக்கு எல்லாம் இந்த அளவுக்குக் காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது மத்திய அரசு என்பதைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். அனுப்பிய அறிக்கைகளுக்குப் பதில் இல்லை. கொடுக்கிற கோரிக்கைகளுக்குப் பதில் இல்லை. ஆனால் வறட்சி பற்றிய அறிக்கை அனுப்புவதில் ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்க—எழுவதற்கு மட்டும் தயாராக இருக்கிறீர்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நேற்று உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசியபோது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த ஆட்சியிலே ராஜிநாமா செய்கிறார்கள், பதவியை விட்டுவிட்டு ஓடுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்றுகூட ஐ.ஏ.எஸ். அதிகாரியொருவர் தான் பதவி விலகியதற்கான காரணம் என்ன என்பதைத் தெரிவித்திருக்கிறார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகத்தான் அரசுப் பணியிலே இருக்கிறார்களே தவிர அவர்கள் தங்கள் இஷ்டம்போல் செயல்படுவதற்கு இல்லை. மக்களாட்சித் தத்துவங்களைத் தெரிந்த நீங்கள் இப்படிப் பேசலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ன கொள்கைகளை ஏற்படுத்துகிறதோ, என்ன திட்டங்களை இடுகிறதோ, என்ன உத்தரவுகளை இடுகிறதோ அதை செயல்படுத்துகிற அதிகாரிகள் தான் இந்த அரசிற்குத் தேவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப்பெற்றது.

ன்
லலலவரின் க்

1983 சனவரி 28] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

(பிற்பகல் 12-40)

இன்றைக்குச் சென்னையிலே போராட்டம் என்றும், கைது என்றும் சொல்கிறார்கள். மாநகராட்சியில் நிர்வாகச் சீர்கேட்டை போக்க போராட்டம் என்கிறார்கள். அவர்களைக் கேட்க விரும்புகிறேன். சென்னை மாநகராட்சி யாருடைய ஆட்சிக் காலத்தில் மிக மோசமாக இருந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சென்னை மாநகராட்சியில் மஸ்டர் ரோல் ஊழல்கள் யாருடைய காலத்தில் ஏற்பட்டது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரட்சித் தலைவர் ஆட்சியைப் பார்த்து மாநகராட்சியில் நிர்வாகச் சீர்கேடு என்று சொன்னால் நீங்கள் தான் ஏதோ புத்தி தடுமாறி இருக்கிறீர்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தை சீரழித்தவர்கள் ஆண்டு முடிந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் என்பதை இந்த நேரத்தில் கூறி குற்றம் சாட்ட விரும்புகிறேன். மஸ்டர் ரோல் ஊழல்கள் எல்லாம் நடைபெற்றது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, பல்வேறு காரணங்களைச் சொல்லி இந்த நாட்டு மக்களை ஏமாற்றுகிற வேலையில் ஈடுபடுவதில் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்....

திரு. துரைமுருகன்: மாநகராட்சிக்கு தேர்தல் இல்லை. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பதைப் போல் இன்றைக்கு உயர் அதிகாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள். நிர்வாகம் சரியில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் குடிநீர் வேண்டி, சுகாதாரம் வேண்டி, தெரு விளக்குகள் வேண்டி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது; கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மாநகராட்சிக்கு ஐந்து ஆண்டுக் காலத்தில் தேர்தல் வைக்காத அரசு—அந்தக் காலத்தில் நான் காலேஜில் படித்தவன் என்று சாரங்கபாணி ஒரு சினிமாவில் கூறுவார்—அதைப்போல கூறிக் கொண்டிருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்களைத் திருத்துவதற்கே நேரம் போதவில்லை என்பதால்தான் இந்த அரசு அலுவலகங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசினுடைய ஆட்சிக் காலத்தில் வெகு சிறப்பாக ஆட்சி நிர்வாகத்தை மாநகராட்சி மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான் எந்தப் போராட்டங்கள் நடத்தினாலும், சரி, எந்தவிதமான கோரிக்கைகளை நீங்கள் வைத்தாலும் தமிழ் நாட்டின் மக்கள் உங்களை நம்பத் தயாராகவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.)

திரு. துரைமுருகன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் நான் அனுமதிக்கவில்லை. உணர்ச்சி வசப்படாதீர்கள். துரைமுருகன் பேசுவதை ஒன்றுகூட எழுத வேண்டாம். குறிப்பில் ஏறாது. நீங்கள் என்னைப் பார்த்து பேச வேண்டும். உட்காருங்கள். உங்களை நான் அனுமதிக்கவில்லை. இவ்வளவு நாட்களாக அவை அமைதியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதேபோல் நடத்த விடுங்கள்.

திரு. துரைமுருகன்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன் பேசிய ஒரு வார்த்தையும் குறிப்பேட்டில் இடம் பெறக் கூடாது. (குறுக்கீடு.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார் என்றால் அதற்கு முன்னால் பேசிய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் இராஜமாணிக்கம் அவர்கள் கூட ஊழல், ஊழல், ஊழல் என்றுதான் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்ல இவர் கடமைப்பட்டிருக்கிறார். இரண்டாம் தேதி வரையில் இந்தப் பொது விவாதம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசுவதற்கு நிரம்ப வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இப்பொழுது சொல்லப்படுவதை மறுத்துப் பதில் சொல்வதற்கு எல்லா விதமான வசதிகளும் வாய்ப்புகளும் அவருக்கு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இராஜமாணிக்கம் ஊழல், ஊழல் என்று சொன்னாரே, அப்பொழுது நாங்கள் யாரும் தடுக்கவில்லை. அதற்கு இப்பொழுது பதில் சொல்கிறோம். இவர் சொன்னதற்கு நீங்களும் பதில் சொல்லிவிட்டு போங்கள்; இல்லையென்று சொல்லிவிட்டுப் போங்கள்.

திரு. துரைமுருகன்: மந்திரியாக இருக்கிறார். ஆகவே வாய்ப்பு கிடைக்கிறது. எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை யென்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு நிறைய வாய்ப்பு கொடுக்கிறேன். அப்பொழுது சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: உங்களுக்காக விட்டுவிடுகிறேன்.

திரு. ஈ. முத்துக்கிருஷ்ணன் : திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நடந்த நிர்வாகத்தைவிட, இப்பொழுது புரட்சித் தலைவர் ஆட்சியிலே நடைபெறுகிற நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என்பதைத் தமிழ் நாடு மட்டும் அல்ல, இந்தியாவே இன்று பாராட்டிக் கொண் டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான் எத்தனை குறைகளைச் சொன் னாலும், எத்தனைப் போராட்டங்களை நடத்தினாலும் மக்கள் எதிர்க்கட்சிகளை ஆதரிக்கத் தயாராக இல்லையென்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன். எத்தனை போராட்டங்களை நீங்கள் நடத்தினீர்கள்? புரட்சித் தலைவரை தமிழ்நாட்டு மக்கள் இதய சிம்மாசனத்திலே வைத்திருக் கிறார்கள், புரட்சித் தலைவருக்கு ஆதரவு தர தமிழ்நாடு தயாராக இருக்கிறது. ஆகவேதான் பல்வேறு இடைத் தேர்தல் களிலே புரட்சித் தலைவருடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு வெற்றிகளை ஈட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் பொறாமைப்படுகிறீர்கள். திருச்செந்தூரிலே தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்தலிலும் புரட்சித் தலைவருடைய அரசுக்கு ஆதரவாக அங்குள்ள மக்கள் வெற்றிக் கனியை புரட்சித் தலைவருக்கு அளிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, திருச்செந்தூர் தேர்தல் முடிவு அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு மண்டபமாக அமய இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அது கட்டாந்தரையாக ஆகப் போகிறது என்ற உண்மையை எடுத்துச் சொல்லி, வாய்ப்பளித்த அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பொதுக் கூட்டம் கிடையாது. அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்று சொல்லக் கூடாது.

*திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரசின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த ஆளுநர் உரையில் சத்துணவுத் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்தோம் என்று மிக விளம்பரப்படுத்தி

நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. மனிதாபிமான உணர்வோடு அதை வரவேற்கிறோம். நடைமுறையில் அது சாத்தியம் இல்லை. அது பெரிய நெருக்கடியை, பொருளாதார நெருக்கடியை, சீர்கேட்டை நம் மத்தியிலே கொண்டு வந்து விடும். 1,44,000 பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு தருவோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். விதவைகள், பின்தங்கியோர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதரவற்றோர், உள்ளூர்காரர்கள் இவர்களுக்குத்தான் நாங்கள் வேலை கொடுப்போம் என்று நீங்கள் அன்றாயதினம் சொன்னீர்கள். ஆனால், அதன்படியா நீங்கள் ஆட்களை நியமனம் செய்தீர்கள்? உள்ளூர்க்காரர்கள் என்று வெளியூர்க்காரர்களையெல்லாம் கேர் ஆப் அட்ரஸ் போட்டு, நீங்கள் நியமனம் செய்யவில்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். விதவைகளுக்கு வேலை என்று சொன்னீர்களே எத்தனை பேர்களுக்கு நீங்கள் வேலை கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே, ஊழல் நடந்தபொழுது, அதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்தேன். இன்றையதினம் அந்த பி.டி.ஓ. மாற்றப்பட்டு டி.டி.ஓ. ஆவதற்கான லிஸ்டுலே இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். 63 இலட்சம் மாணவர்களைப் புதிதாகச் சேர்த்திருப்பதாக உரையில் சொல்லியிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறான தகவல் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் திருச்சி புதூரிலே திடீர் சோதனை நடத்தினார். 50 பேர்கள் எனக் கணக்கெழுதிவிட்டு 20 பேருக்குத்தான் உணவு வழங்கப்பட்டது என்பதை அவர் நேரடியாகப் பார்த்து கண்டித்ததாகப் பத்திரிகையிலே நான் பார்த்தேன்.

(பிற்பகல் 12.50)

''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்பதைப் போல, திருச்சியில் நடத்தப்பட்ட போலத்தான் தமிழகம் முழுவதும் இருக்கும் என்று நான் சந்தேகப்படுகிறேன். இந்தத் திட்டத்தின் காரணமாக 2.63 இலட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள் என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் அந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கற்பிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களை, 5,000 ஆசிரியர்களை யாவது புதிதாக நியமித்திருக்க வேண்டுமே, ஏன் அவ்வாறு நியமிக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்காக அமைப்பாளர்கள் இன்னும் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? ஜனவரி 5-ஆம் தேதிக்குள் அவர்களை நியமிப்போம் என்று சொன்னீர்கள். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மாதம் 31 ஆம் தேதிக்குள் நியமனம் செய்து விடுவோம் என்று சொன்னார்கள். அப்படியானால் இதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? உங்கள் கட்சிக்காரர்களை

அதிலே புகுத்தத் திட்டமா? அவர்களையெல்லாம் குறளமுது ஆசிரியர்கள் என்று அழைக்கப் போவதாகச் சொல்கிறீர்கள். குழந்தைகளுக்குத் திருக்குறள் கற்பிப்பார்கள் என்று சொல்கிறீர்கள். அவர்கள் குழந்தைகளுக்கு. "எப்பொருள் எங்கெங்கு கிடைப்பினும் அப்பொருள் அ.தி.மு.க. பொருள் காண்க" என்றுதான் சொல்லிக் கொடுப்பார்கள்.

வட்டாரத்திற்கு ஒரு தொழிற்சாலை வீதம் ஆரம்பித்திருந்தால் கூடச் சிறப்பாக இருந்திருக்கும். நீண்ட நெடுந்தொலை நோக்குடன். மக்களை வாழ வைக்கும் திட்டமாக அது இருந்திருக்கும்.

பின் தங்கிய வகுப்பினரின் மேம்பாட்டுக்காக ஆணையம் ஒன்றை நியமித்திருக்கிறோம் என்று பெருமையோடு சொல்லுகிறீர்கள் பின்தங்கிய வகுப்பினரின் தற்போதைய பட்டியல் அவர்களுக்கான ஒதுக்கீட்டுச் சதவீதம் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய பின்தங்கிய வகுப்பினர் நல ஆணையம் அமைத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். அதில் முன்னேறிய வகுப்பினரைச் சேர்ந்தவரை அதிக அளவில் இடம் பெறச் செய்துவிட்டு பின்தங்கி வகுப்பினருக்கான நலக் குழு என்றுச் சொல்லுகிறீர்கள். தமிழ்நாட்டிலே பெரும்பான்மையாக இருக்கும் வன்னியர்களுக்கு அதிலே அதிகப் பிரதிநிதித்துவம் இல்லை. விவரம் தெரிந்த எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் தமிழகத்திலே எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். சமுதாயத்திற்கு உழைக்கும் அந்தப் பெருமக்களிலேயிருந்து முக்கியமானவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தக் குழுவிலே போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

தமிழ்நாட்டிலே 100 சதவீதம் மின்வெட்டு, விவசாயிகளுக்கு மின்சாரம் இல்லை, இன்று மின்சாரம் வரும் என்று இரவு பகலாகக் கண்விழித்துக் கொண்டு விவசாயிகள் வேதனையோடு வாடிக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களும் நகரங்களும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன இதனால் தொழிற்சாலைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது; தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, இதற்குக் காரணம் மின்ாரவெட்டு. ஏன் மின்சாரஉற்பத்தியைப் பெருக்குவதற்காக புதிய திட்டங்களைக் கொண்டு வரவில்லை, அதற்கான கொள்கை அறிவிப்பு ஒப்பொழுதும் இல்லை. காரணம் கேட்டால், மின்சார உற்பத்தி நிலையங்களில் இருக்கின்ற இயந்திரங்களெல்லாம் பழுதாகிவிட்டன என்று சொல்கிறீர்கள், இதற்கெல்லாம் காரணம் பெல் இன்ஜினியர்கள்தான் என்று பழி சுமர்த்திக் கொண்டிருக்கிறீர்கள்.

1983 சனவரி 28] [திரு. கே. எம். தங்கமணி

இந்தியாவில், ஏன், உலகத்திலேயே 100-க்கு 100 சாதனை புரிந்தது பெல் நிர்வாகம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டாமா? 110 மெகாவாட்டாக இருந்ததை 10 நாட்களில் 300 மெகாவாட்டாக இன்ஜினியர்கள் உயர்த்திக் காட்டினார்களே, அவர்களை நீங்கள் அழைத்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றிருக்க வேண்டாமா?

அன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே செய்ததுபோல் அப்பாத்துரை போன்ற நிபுணர்களை அந்தக் கழகத்தின் தலைவராகப் போட்டால் இந்த மின் வெட்டை எப்படிச் சரிசெய்யலாம் என்று சொல்லி சரி செய்து கொடுத்திருப்பார்களே, அவ்வாறு ஏன் செய்யவில்லை?

மின் கட்டண உயர்வினால் விவசாய உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு பொருளாதாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு பொருள்களுக்கு அதிக விலை அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ''ஆளைக் கீழே தள்ளியது மட்டுமின்றி ஆழக் குழியும் பறித்ததாம் குதிரை'' என்று பழமொழி சொல்வார்களே அதுபோல் இருக்கிறது மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்ற உங்களது செயல்.

தென்னாற்காடு மாவட்டத்திலே பெரும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஏழு இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; 1,718 ஏரிகளில் தண்ணீர் இல்லை. வீராணம் ஏரி, பெருமாள் ஏரி ஆகியவை காய்ந்து கிடக்கின்றன. வீடூர் நீர்த்தேக்கம் என்னுடைய தொகுதியில் உள்ளது. அதில் இதுவரையில் வரலாறு காணாத வகையில் சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. திண்டிவனம் நகரத்தில் பெரும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் அறவே நீர் இல்லை என்ற நிலையிருக்கிறது. ஆகவே இதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து அவர்களின் துயர் துடைப்பதற்கான பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்களைத் துவங்குவதற்கு மத்திய அரசு அனுசரணையாக இல்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், உதவி புரியவில்லை என்று சொல்லுகிறீர்கள். இரயில் இணைப்புத் தொழிற்சாலை இங்கே வராமல் போனதற்குக் காரணம் யார்? அசோக் லேலண்ட் வட புலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது யாரால்? 550 கோடி மதிப்புள்ள கடற்படை பயிற்சி நிலையம் கேரளாவிற்குப் போனது யாரால், கொச்சு ஒழிப்பு முன்னோடித் திட்டமாக இராமேஸ்வரம் தீவில் வெக்டார்-கண்ட்ரோல் செயல்பட டெல்லி விரும்பி அனைத்துச் செலவுகளையும் ஏற்ற பின்னால் அதைக் கை நழுவவிட்டது யார், இவைகளெல்லாம் உங்களால் ஏற்பட்டதுதானே என்ற குற்றச்சாட்டைச் சாட்ட நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1983 சனவரி 28] [திரு. கே. எம். தங்கமணி]

எங்களுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லை. எல்லா மாநிலங்களையும் சரிசமமாகப் பாவிப்பதுதான் எங்களுடைய கடமை என்று சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் மனுப்போட்டு விட்டால் மட்டும் போதாது. சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து அவர்களிடத்திலே பேசினால் நிச்சயமாக அதற்குப் பலன் இருக்கும். உங்கள் டெல்லி பிரதிநிதி என்ன செய்து கொண்டிருக்கிறார். டெல்லி மாநகரத்திலே அவர் என்ன செய்யவேண்டும். தமிழகத்திலே இருந்துபோன அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களை, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த 40 பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசுவதற்கான வாய்ப்பை அவர் உருவாக்கித் தரவேண்டும். தமிழகத்திலே இருந்து முதலமைச்சரோ, அமைச்சர் பெருமக்களோ சென்றால் அவரிடத்திலே 40 எம்.பி.க்களையும் சேர்த்து வைத்து பேசி, தமிழகத்திற்கு இன்னின்ன திட்டங்கள் தேவை அதற்காக நீங்கள் வாதிடுங்கள், பிரதமர் இந்திராவிடத்திலேயும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்திலேயும் சென்று கேளுங்கள் என்று சொல்லவேண்டும். அதற்காகத்தான் அந்தப் பிரதிநிதி பின் வேறு எதற்காக இருக்கிறார். சுகமிலே போக. உல்லாசமாக வாழ பக்களாவிலே இருப்பதற்கு மட்டுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருந்து டெல்லிக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் செல்லுகின்ற நேரத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசினால்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி வாதாடுவார்களா? அவர்களுக்கு என்று தனியாக பொறுப்பு இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது எல்லாம், எல்லா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழகத்தின் நலன் பற்றி வாதாடுவதற்கு பேசுவதற்கு உரிமை படைத்தவர்கள். அதைத்தான் செய்கிறார்கள். ஆனால் தமிழக முதலமைச்சரோ அல்லது அமைச்சர்களோ சென்று, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை அழைத்துப் பேசுவதில் என்ன தவறு என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சார வெட்டு, காவிரியிலே தண்ணீர் இல்லை, தொழில் துறையிலே பூஜ்யம். இவைகளுக்குக் காரணம் மத்திய அரசு என்று மக்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிறீர்கள். இன்றையதினம் அரிசி விலை உயருகிறது. மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள்; தண்ணீர் இன்றி மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரம் இன்றி ஊர்கள் எல்லாம் இருளிலே மூழ்கிக் கிடக்கின்றது. தொழிற் சாலைகள் மூடுவிழா, தொழிலாளர்கள் துயரம், உழவர் பெருமக்கள் வேதனையாலே கண்ணீர் விடுகின்ற காட்சி—இவைதான் இன்றையதினம் இருக்

கின்றது. இதற்காகத்தான் தமிழக அரசை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் ஏற்றுக் கொண்டோமா! என்று மக்கள் இன்றையதினம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வக்கில்லாத உங்களுக்கு ஆட்சி ஏன்? அரசுக் கட்டில் ஏன்? அமைச்சர் பதவி ஒரு கேடா என்றுதான் மக்கள் கேட்கிறார்கள் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண் மிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என்னுடைய கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். முதலாவது சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் உணர்வு களைத் தெரிவித்திருக்கிறார்கள். திட்டங்களைத் தீட்டும்போது அல்லது அடிப்படை நோக்கங்களின் வாயிலாக சில முக்கியமான உணர்வுகளை பிரதிபலித்திருக்கிறார்கள். திட்டங்களினுடைய பலன்கள் அனைத்து மக்களுக்கு செல்லவேண்டும்—அதுவும் நேரடியாக மக்களிடம் செல்லவேண்டும் என்ற அந்த அடிப்படைக் கருத்துக்கொப்ப இன்றையதினம் சத்துணவுத் திட்டமாக தமிழகத்திலே புரட்சித் தலைவர் அறிமுகப்படுத்தி, இன்று 1.40 இலட்சம் போர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், சுமார் 65 இலட்சம் குழந்தைகள் சத்துணவு தினம் தினம் உண்ணுகின்ற ஒரு நிலையினை ஏற்படுத்து இருக்கிறது. அந்தச் சத்துணவுத் திட்டத்தை அனைவரும் பாராட்டுகிறார்கள். பாராட்டுவதற்கு மனம் இருந்தாலும் அதைப் பாராட்டாமல் இருந்துவிட்டு, அதனை குறைகூறுவதிலே எண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள்.

ஒரு மிகப்பெரிய திட்டத்தைப் போடும்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக குறைகள் ஏற்படுவது சர்வசாதாரணமாக நிகழ்கின்ற ஒரு செயல்தான். அவைகளை எல்லாம் களைந்து வருங்காலத்தில் இதை ஒரு சிறந்த திட்டமாக நடைமுறைப் படுத்தவிருப்பதாக தமிழக அரசு தயாராக இருக்கிறது, என்பதை அறியும்போது மகிழ்ச்சி அடைகின்றோம். இந்தத் திட்டத்தைப் பற்றி, அருகிலே இருக்கின்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் அதைப் பார்த்துவிட்டு அவர்களுடைய மாநிலங்களே இதை நடைமுறைப் படுத்த இருப்பதாக கூறுகிறார்கள். யுனஸ்கோ நிறுவனமும் பார்த்து விட்டு இந்தத் திட்டத்தினுடைய சிறப்பை அவர்கள் அறிந்திருக் கின்ற நிலையிலே இந்தத் திட்டம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது.

அதைப்போலவே தன்னிறைவுத் திட்டம். கிராமங்களிலே குறிப்பாக கிராமப் பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமை மோசமாக இருந்து கொண்டிருக்கின்ற, 10, 15 ஆண்டுகாலமாக நிதி வசதி இல்லாது, அடிப்படையான நேராடுகளைக் கூட போடமுடியாத நிலையில், அடிப்படைத் தேவையான குடிநீர் பற்றாக்குறையைப்

போக்க முடியாத நிலையில் உள்ள பஞ்சாயத்துக்களில் எல்லாம் இன்றையதினம் தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக நல்ல சில முன்னேற்றங்களை, வசதிகளை எல்லாம் பெற்று, கிராமப்புற வளர்ச்சியிலே முக்கியமான ஒரு இடத்தை, இந்தியாவிலேயே பெற்றிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

(பிற்பகல் 1-00)

அதைப்போலவே குறிப்பாக பேரூராட்சிகளிலே வருகின்ற நிதி ஆதாரங்கள் எல்லாம் அங்கே வருகின்ற, வேலை செய்கின்ற அந்த பேரூராட்சி அலுவலர்களுக்கே சம்பளமாகப் போய்விடுகிற காரணத்தாலே அங்கே அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிற நிலை இருக்கின்ற காரணத்தாலே இன்றையதினம் 10 கோடி ரூபாய்ச் செலவிலே தன்னிறைவுத் திட்டமானது 146 பேரூராட்சிகளிலே இன்றைய தினம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே பொதுக் கழிப்பிடங்களைப் பற்றி, குறிப்பாக பெண்களுக்காக கிராமப் பகுதிகளிலே பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு இன்றைக்கு இதுவரை யாருமே சிந்திக்காமல் இருந்தார்கள். ஆனால் இப்போது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்காக 22.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அதைப்போலவே, காவிரி நதிநீரைப் பொறுத்தவரையில் 1974 ஆம் வருடம் காலாவதியான அந்த ஆண்டிலேயே அதை மறுபரிசீலனை செய்து, அதற்கு மாற்று ஒப்பந்தம் தயாரித்து இருக்கவேண்டும். ஆனால் என்ன காரணத்தாலோ அன்றைக்கு இருந்த அரசின் அலட்சியப் போக்கினாலோ என்னவோ தெரியவில்லை, அந்த ஒப்பந்தமானது மறுபரிசீலனை செய்யப்படாமல், புதுப்பிக்கப்படாமல் போனதன் காரணமாக இன்றையதினம் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தாலும் காலாவதியான அந்த ஒப்பந்தமானது மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கிறது. பராக்காபேராஜ் பிரச்சனையிலே மாண்புமிகு இந்திய தலைமை அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய அதிபருக்கு கடிதங்கள் மூலமாகவும், நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் பேசி, அந்த நதிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் ஆனால் தமிழகத்திலே, இங்கே ஒப்பந்தம் காலாவதியான நேரத்திலே ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு மத்திய அரசானது இங்கே தலையிடுவதற்கு தயங்கிக்கொண்டிருக்கிற நிலையிலே இருக்கிறது இது மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா? எல்லா மாநிலங்களையும் நாங்கள் சரிநிகர் சமானமாக நடத்துகிறோம் என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கூறுகிறார்கள். இது மாற்றாந்தாய்

மனப்பான்மை இல்லையா? மத்திய அரசானது மாநிலங்களிலே யிருந்து செல்லக்கூடிய கோரிக்கைகளுக்கு எல்லாம் கவனியாமல் செவிடன் காதிலே ஊதிய சங்கைப்போல் இருக்கிறதே தவிர, அதை அவர்கள் கேட்பதற்குத் தயாராக இல்லை. அழிந்துபடக்கூடிய அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப துங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புதிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கட்சி உருப்படுமா? இந்த ஆட்சி உருப்படுமா என்று காங்கிரஸ்காரர்களே சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நிலையிலே மத்திய அரசானது மாநில அரசின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு மாநில உரிமைகளுக்காக முன்வர வேண்டுமென்று.....

திரு. நா. சுந்தரராஜ்: மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு ஜெயராமன் அவர்கள் பேசுகிற பேச்சிலே இந்தக் கட்சி உருப்படுமா, இந்த ஆட்சி உருப்படுமா என்று காங்கிரஸ்காரர்களே பேசிக் கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களது கட்சி சாதாரண கட்சியல்ல. 1885 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு சோதனைகளைத் தாங்கி, தொடர்ந்து வீறு நடை போட்டுக் கொண்டுதான் வருகிறோம். இனியும் செல்வோம் என்பதை மட்டும் தாங்கள் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. இரா. ஜெயராமன்: மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு சோதனையாகவும் வேதனையாகவும் தான் அமைந்திருக்கிறது கர்நாடகத்திலேயும், ஆந்திராவிலேயும், நடந்த தேர்தல்கள் அதைப்போலவேதான் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இங்கே இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகத்தினுடைய பொது திட்டங்களுக்கு நீங்கள் குரல் கொடுக்கவேண்டும். எல்லா மாநிலங்களையும் சரிநிகர் சமானமாகத்தான் மத்திய அரசு நடத்துகிறது என்றால், இங்கே இருக்கிற ஊட்டி கலர் பிலிம் தொழிற்சாலையை தமிழக அரசு குறிப்பாக தெள்ளத்தெளிவாக மாற்றக்கூடாது என்று எழுதியதற்குப் பின்னாலும்,—நேற்றையதினம் இதே சட்டமன்றத்திலே என்.டி.திவாரி என்பவர் இந்த மாநிலத்திலேயிருந்து செல்லுகின்ற தொழில் முனைவோர்களைப் பார்த்து, இங்கே தமிழ் நாட்டிலே ஏன் தொழில் துவங்குகிறீர்கள், உத்திரப் பிரதேசத்திற்கு வாருங்கள், உங்களுக்கு சகல வசதிகளையும் அளிக்கிறோம், உங்களுக்கு எல்லாம் செய்துவிடுகிறோம் என்று கூறுகின்ற.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ஆர். டி. கோபாலன்) நேற்றே இதைப்பற்றி பேசியாகிவிட்டது. பேசியதையே திரும்ப திரும்ப பேசவேண்டாம். (குறுக்கீடு).

1983 சனவரி 28]

திரு. என். எஸ். வி. சித்தன்: Sir, Iam on a point of order நேற்றையதினம் இம்மாமன்றத்திலே ஆளும் கட்சி உறுப்பினர்களால் பேப்பட்டு, அதற்கு எங்கள் வரிசையிலே இருந்து, எங்களாலே, அதை நிருபியுங்கள், யார் சொன்னார்கள், எங்கே சொன்னார்கள், எதிலே காட்டுங்கள் என்று கேட்டதற்குப் பின்னாலேயும், நிருபிக்க முடியாத நிலையிலே மீண்டும், இதே குற்றச்சாட்டை இதே மன்றத்திலே சொல்வது நியாயம்தானா? நீங்கள் தீர்ப்பு வழங்கவேண்டும். நேற்றையதினம் இங்கே எழுப்பப்பட்டு இந்தப் பக்கம் கேள்வி கேட்டதற்குப் பின்னாலே பேசுவது முறையாகாது. வேறு பிரச்னைக்கு போகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ஆர். டி. கோபாலன்) அதைப்பற்றி பேசி நிருபித்து விட்டார்கள். இத்தோடு விட்டு விடுங்கள். (குறுக்கீடு).

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் கூறுகின்ற கருத்து தவறானது. நிருபிக்கப்படவில்லை. நான் கேட்ட கேள்வி, யாரிடம் சொன்னார்கள் என்றுதான் கேட்டேன். யார் சொன்னது என்பது அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவகாரம் நேற்றே நடந்து முடிந்த விவகாரம். (குறுக்கீடு). அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதை திரும்பத்திரும்பப் பேசி என்ன பிரயோஜனம். (குறுக்கீடு). அவைக்குறிப்பிலே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நேற்று இந்தப் பிரச்னை வந்தது. இந்தப் பிரச்னைப் பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும். கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். ஒரு கருத்து சொல்லப்பட்டது. மாண்புமிகு மத்திய அமைச்சர் திவாரி கூறினார் என்று சொல்லப்பட்டது. அதை நிருபிக்க வேண்டுமானால்— மத்திய அமைச்சர் சொன்னார் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், மத்திய அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் நிருபிக்க வேண்டும். ஆகவே நிருபிக்க வேண்டிய பொறுப்பு இரண்டு பக்கத்திற்கும் இருப்பதால் இந்த பிரச்னையை இத்தோடு விட்டுவிடலாம்.

திரு. வெ. இரா. ஜெயராமன்:— நேற்று இது குறித்து சூடான விவாதம் நடைப்பெற்றது. அதைப் பார்த்து விட்டு மாண்புமிகு மத்திய அமைச்சர் திவாரி மறுப்பு அறிக்கை விட்டிருக்கலாம். இவர் மறுப்பு அறிக்கை விடாததால், அவர் அதைச் சொல்லியிருக்கிறார் என்று தான் அர்த்தம்,

திரு. நா. சுந்தரராஜ்; மத்திய அமைச்சர் கிள்ளுக் கீரை அல்ல. பத்திரிக்கையைப் பார்த்த உடனே அறிக்கை விடுவதற்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அமைச்சர் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணத் தலைவர்; நீங்கள் அப்படிச் சொல்வது தவறு. எல்லோரும் மக்களைச் சந்தித்துத் தான் பதவிக்கு வருகிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: குற்றச்சாட்டு சொல்வது பரவாயில்லை. ஆனால் அதை எஸ்டாபிளிஷ் செய்வதற்கு ஆதாரங்கள் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) ...

திருமதி. டி. யசோதா. இந்தச் சட்டமன்றத்திலுள்ள சில உறுப்பினர்கள் திவாரி எவ்விடத்தில் சொன்னார் என்று இங்கே குரல் எழுப்பினார்கள். உறுப்பினர் திரு வின்சென்ட் கூட அப்படி தெரிவித்தார். அது உண்மையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட்; நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. வே. ஏரா. ஐயாமன்:—: மத்திய அரசு எல்லா மாநிலங்களையும் சரிநிகர் சமானமாக பாவிக்கிறது என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் பருவ மழை பெய்ததன் காரணமாக நீர்த் தேக்கங்களில் தண்ணீர் அளவு குறைந்து விட்டதால் மின்சார உற்பத்தி அதிகஅளவு செய்யமுடியவில்லை. ஆகவே அனல்மின்சார நிலையங்கள் மூலமாகத் தான் மின் உற்பத்தியை அதிகமாக எதிர்ப்பார்க்கிறோம். இன்றைய தினம் தமிழகத்தில் குறிப்பாக மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் கஷ்டமான நிலைமை இருந்தாலும், இப்போது கிடைக்கின்ற அந்த மின்சாரத்தை வைத்து ஒரு நல்ல பங்கீட்டு முறையின் மூலம் விவசாயத்திற்கு மின்சாரத்தைத் தமிழக அரசு அளித்து வருகிறது. ஆனால் மின்சாரத் துறை அனல் மின்நிலையத்திற்கு பயன்படுத்தக் கூடிய நிலக்கரி தரம் குறைந்து இருக்கிறது. தமிழக அரசு நிலக்கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசைக் கேட்டிருந்தும் அனுமதி அளிக்கப் படவில்லை. இதுதான் மத்திய அரசு சரிநிகர் சமானமாக மாநில அரசுகளை நடத்துவதற்கு அடையாளமா என்பதை அறிய விரும்புகிறேன். பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் மின்சார உற்பத்தி செய்யும் இயந்திரங்களை தயாரித்து நமக்கு கொடுத்திருக்கிறது. அவகள் அனல் மின் நிலையங்களில் பயன்படுத்தப் படுகின்றன. வெளி நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட மின்உற்பத்தி இயந்திரமாக இருந்திருந்தால் 80%முதல்90%வரை மின் உற்பத்தி திறன் கிடைத்திருக்கும், ஆனால் பி.எச்.இ,எல் நிறுவனம் தயாரித்தளித்த மின் இயக்க இயந்திரங்களில் மெடலர்ஜிகல் பிராப்ளம் அண்ட் டெக்னிகல் டிப்கட்ஸ் இருந்த காரணத்தால் 30% முதல் 35% வரை தான் உற்பத்தி திறன் நமக்கு

1983 சனவரி 28] திரு. வெ இரா. ஜெயராமன் தொடர்ச்சி

கிடைத்தது, ஆகவே வெளிநாடுகளிலிருந்து நல்ல மின்உற்பத்தி திறன் கொண்ட இயந்திரங்களை வாங்குவதற்கு மத்திய அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—10)

அடுத்த படியாக உணவு நிலையைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் ஆந்திரா அரசு தமிழகத்திற்கு உதவும் வகையில் செய்தி வெளியிட்டிருக்கிறது, அதைப் போன்று மத்திய அரசும் நமது உணவு நிலைமையைப் பார்த்து உதவும் என்று மாண்புமிகு ஆர்,வி.சுவாமிநாதன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மத்திய அரசின் கவனத்திற்கு இவ்வொன்றையும் கொண்டு வர விரும்புகிறேன். காவேரியில் தண்ணீர் கிடைக்க முடியாத இந்த நிலையில் நிலைமை மேலும் மோசமாகாமல் இருக்க அதிக அளவில் உணவு தானியங்களை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாலை வசதிகளைப் பொறுத்த வரையில் கிழக்கு கடற்கரையோர சாலைக்கு இதுவரை ரூபாய் இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையில் தேவைக்கு இது போதுமானதல்ல, கடந்த 5, 6 ஆண்டுகளில் தேசீய நெடுஞ்சாலை ஒன்று கூட, ஒரு பர்லாங் கூட மத்திய அரசு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் படவில்லை. இப்படி பல்வேறு வகைகளில் மத்திய அரசில் இருப்பவர்கள் சரியாகச் செயல்படாமல் இருந்துக் கொண்டு, மாநில அரசை குறை கூறுகின்ற அவர்களுக்கு ஒன்றை மட்டும் நினைவு படுத்த விரும்புகிறேன். இப்போது அரசியல் காரணமாக காற்று திசைமாறி அடிக்க ஆரம்பித்திருக்கிறது. அவர்கள் ஆட்சியில் இருக்க லாயக்கு இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும் போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறை பற்றி பேசினார்கள். தமிழ்நாட்டிலே தூத்துக்குடியில் ஒரு அனல் மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டும் மூன்று யூனிட்டுகள் அங்கே இயங்க வேண்டியிருந்தன, அந்த மூன்று யூனிட்டுகளும் சரியாக இயங்கியிருக்குமானால் அங்கே 110 மெகாவாட் மின்சாரம் கிடைக்கப் பெற்று, அந்தப் பகுதியிலே மின்சாரப் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்து நல்ல முறையில் விவசாயம் நடைப்பெற வாய்ப்பாக இருந்திருக்கும். இப்போது நாம் எதிர்ப்பார்த்த அளவுக்கு மின்சாரம் அங்கே கிடைக்கவில்லை,

[திரு. என். எஸ். இராசாமி] [1983 சனவரி 28

மேலும், பருவ மழை சரியாக இல்லாத காரணத்தினால் அந்தப் பகுதியிலே வாழக் கூடிய மக்கள் மின்சார பம்புசெட்டுகள் மூலம் நிலத்தடி நீரைப் பயன் படுத்தி விவசாயம் செய்ய வேண்டியிருப்பதால் இந்த தூத்துகுடி அனல்மின்சாரநிலையத்தை நல்ல முறையிலே இயங்கச் செய்து அவர்களுக்கு மின்இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்தப் பகுதியிலே தாரங்கதாரா இரசாயண தொழிற்சாலை இயங்கி வந்தது, அதில் சுமார் 1500 பேர் வேலைப் பார்த்தார்கள். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக அங்கே தொழிலாளர்கள் பிரச்னை ஏற்பட்டு, அந்த தொழிற்சாலையில் 'லேஆஃப், செய்யப்பட்டது. லே ஆஃப் செய்யப்பட்டப் பின்னால், இப்போது இந்த மின்சாரக் குறைவு காரணமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு விடுமோ என்று அங்குள்ள மக்கள் அஞ்ச வேண்டிய அளவுக்கு அங்கே நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்; தமிழ்நாட்டிலே அந்த மின்சாரப் பற்றாக்குறை இருந்தாலும் கூட மின்சாரத்தை உபயோகிப்பவர்கள் எந்த அடிப்படையில் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கிராமப்புறங்களில் இருக்கின்ற ஜே. இ. ஆபிஸ் வரையில் ஆணைப்பிரப்பிக்க வேண்டும். காரணம் என்னவென்றால் நகரங்களில் இருக்கிற அத்தனை கடைகளிலும் போர்டுகளிலும் பெருமளவில் லைட்டுகளைப் பயன் படுத்துகிறார்கள். அதைப் போன்று கிராமங்களிலும் கூட தெருவிளக்கு, கடைகளுக்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

மேலும் கிராமங்களிலே குடிசைக்கு ஒரு லைட் என்ற வீதத்தில் இப்போது கொடுக்கப்பட்டுள்ளது.

அங்கே அந்த கிராமப்புறங்களிலே ஒருலைட் எரிந்தால் அவர்கள் 2¼ ரூபாய் கட்ட வேண்டும். ஆனால் இங்கே நாம் பல லைட்டுகளை எரிக்கிறோம். அது மட்டுமல்ல, இங்கே உள்ள மின சார இணைப்புகளுக்கெல்லாம் மீட்டர் பொருத்தப்பட்டு, அதிலே கணக்கிடப்பட்டுதான் பில்கள் கட்டப்படுகின்றன. குடிவாசிகளுக்கு ஒரு குடிசைக்கு ஒருலைட் என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த குடிசையில் வாழக்கூடிய மக்கள் ட்ரான்சிஸ்டர்களுக்கு, அடப்டா போன்றவைகளை உபயோகித்து மின்சாரம் எடுக்கிறார்கள். அதைப் போலவே சில சாதனங்களைச் செய்துக் கொண்டு, பக்கத்திலே நடைபெறுகின்ற, திருமணம், சடங்குகள், சிறிய கோவில்களின் திருவிழாக்கள் போன்றவைகளுக்கு அந்த குடிசைகளிலிருந்து மின்சார சப்ளை எடுக்கிற தன்மைகளும் சில இடங்களில் இருக்கின்றன. இவை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு அரசு முயற்சிகள் மேற் கொள்ள

வேண்டும். அடிக்கடி வொயர்மேன்கள், மற்றும் மின்சார அலு வலர்களை போய் சரிப் பார்க்க வேண்டும் என்கிற உத்திரவை அரசாங்கம் இட வேண்டும்.

மேலும் கிராமங்களில் உணவு வினியோகம் குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் கிராம வாரியாக நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அரசாங்கத் திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற ஆணையின்படி ஒரு கிலோ அரிசி 1½ரூபாய்க்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும் அதற்கு தனியாக பில்கள் வைத்திருக்க வேண்டும் என்றும் இருக்கிறது. அந்த பில்கள் மூலம கத் தான் மக்களுக்கு உணவுப் பொருள்கள் வினியோகம் செய்ய வேண்டும் என்றும் அதில் சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் அங்கே உண்மையில் நடப்பது என்னவென்றால் கார்டுகளை வாங்கிக் கொண்டு, உணவுப் பொருள்களை இஷ்டு செய்வதற்கான பதிவுகளை அதில் பதிந்துக் கொண்டு, ஒருகிலோ அரிசி 2 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. அதுவும் எந்தவிதமான பில்களும் கொடுக்கப்படாமலேயே இதனால் கிராம மக்களுக்கு பல விதங்களில் தொல்லைகள் ஏற்படுகின்றன..... பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் 106—வது விதியின் கீழ் ஒரு அறிக்கையினை சமர்ப்பிப்பார்கள். பிறகு, திரு. இராமசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

8. அறிக்கை அளித்தல்.

கேரளா மாநிலம் வழங்கும் உபரி மின்சாரம் பற்றிய ஒப்பந்தம்.

மாண்புமிகு திரு. ச இராமசந்திரன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்கின்றேன்.

கேரள மாநில உபரி மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குப் பெற வேண்டும் என்பதற்காக கேரள மாநில மின்துறை அமைச்சரோடு இன்று முற்பகலில் நான் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து கீழ் காணும் ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கும் கேரள மநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

கேரள மாநிலம் தனது தேவைக்கும் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட இனங்களுக்கும் போக மீதம் உள்ள உபரி மின் சக்தியை தமிழ்நாட்டிற்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கும்;—